மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: விவசாய மானியக் கோரிக்கை விவாதத்தின்பொழுது விரிவாக அனைவரும் பேச இருக்கிறோம். அப்பொழுது நான் இதற்குப் பதில் கூறலாம் என்று கருதுகிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: இந்தப் புதிய ரகம் எல்லா மாவட்டங்களிலும வினியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? எக்ஸ்பெரிமெண்டலாக செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. விதைகள் எல்லோருக்கும் விநியோகம் செய்வதற்கு வழி வகுக்கப்பட வேண்டும். அப்படி இருந்தால், எல்லா மாவட்டங்களுக்கும் வந்ததாகத் தெரியவில்லை. இனிமேலாவது விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: புதிய ரகம் என்று தான் சொன்னேன். எனவே, இதை முழுவதும் பரீட்சித்தபிறகு மற்ற மாவட்டங்களுக்கும் கொடுப்பதற்கு ஏற்பாடு நிச்சயம் செய்யப்படும்.

Export of rat skins

* 592 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare, with reference to question No. 456 (576) answered on the floor of the Assembly on 25th March 1969, be pleased to state the steps taken by the Government to explore export market for rat skins?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சென்னை, மத்திய தோல் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையத்தினருடனும், பெங்களூர், எலி ஒழிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ஒ. ஜி. ராஜாளுவுடனும் தொடர்பு கொள்ளப்பட்டது. எலித் தோலை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவே என்று விசாரணைகள் மூலம் தெரியவருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: எலித் தோல் மிக வலுவானது என்றும், எலித் தோலினால் செய்யப்பட்ட பர்ஸுகள், பைகள் எளிதில் கிழிவதில்லை என்றும், ஜெர்மனி முதலிய நாடுகளில் எலித் தோலுக்கு கிராக்கி இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. இதுபற்றி அரசாங்கம் ஆராய்ந்ததா ? இதுவரையில் ஆராயாவிட்டால், இதை ஏற்றுமதி செய்வதற்கு வழிவகை செய்யப்படுமா ? அதனால் எலித் தொல்லையும் கொஞ்சம் குறையுமே ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: பங்களூர் எலி ஒழிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ஒ. ஜி. ராஜாளுவுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. அவர் மிகச் சிறிய அளவுக்குத்தான் எலித் தோலை விரும்புவதாகக் கூறப்பட்டது. இந்த எலித் தோல் என்பதில், பெருச்சாளித் தோல்தான் தேவைப்படுகிறது என்று கூறுகிறார்கள். விவசாயிகள் இவற்றை சாதாரணமாக வயல் வெளிகளில் பிடிக்கிறார்கள். அவற்றை பிடிக்க 10 பைசா, 20 பைசா என்று கொடுக்கப்படுகிறது. பெருச்சாளிகளைப் பிடித்து, உடனேயே தோலை உரித்து, குந்தகம் இல்லாமல் அதை 'பிரைலில்' தோய்த்து, உலர்த்திக் கொடுத்தால், ஒரு தோலுக்கு 25 பைசா வீதம் கொடுக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இது சிரமமாக இருப்பதால் விவசாயிகள் இதில் அக்கறை காட்டவில்லை; இதைத் தொடர்ந்து செய்யமுடியவில்லை.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கே இருக்கின்ற ஒரு மந்திரி எலி சத்துள்ள உணவு ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை. திரு. பூபதி.

1970 மார்ச் 31]

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, இந்த எலித் தோலை எந்த அளவுக்கு அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய முடிகிறது? ஏதாவது அந்நியச் செலாவணி கிடைக்கிறதா? கேரளாவில தவளைகளை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி பெறுகிறார்களே அதேபோல் செய்யத் திட்டம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அதைத்தான் சொன்னேன். எலியைப் பிடித்து தோலை உரித்துக் கொடுப்பதில் சிரமங்கள் இருக்கின்றன; விவசாயிகள் இதில் நாட்டம் காட்டவில்லை.

திரு. இல. பலராமன்: எலிகளைப் பொறுத்தவரையில், அவை உணவு தானியங்களைப் பாழ் படுத்துகின்றன என்பது நாடறிந்த உண்மை. ஆகவே, இப்படிப்பட்ட எலிகள் எவ்வளவு இருக்கின்றன என்று அரசாங்கம் கணக்கெடுத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: எலிகளின் உற்பத்தியில் உறுப்பினர் இவ்வளவு அக்கறை காட்டுவார்கள் என்றால், நிச்சயமாக தனிக் கேள்வி போட்டால், அந்தக் கணக்கையும் எடுத்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

Instructors in Industrial Training Institutes

* 617 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Industrial Training Institute Instructional Staff Association have submitted any Memorandum to the Hon. the Minister;

(*b*) if so, the details of their demands;

(*c*) whether this Government propose to consider any of their demands; and

(*d*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சபை முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE: Will the Hon. Minister be pleased to state the persons who had been trained in these I.T.I. every year and the number of people who got employment? I think there are a large number, nearly 50 per cent who are without employment. If so, will the Hon. Minister state what steps he proposed to take to see that these people are given employment?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கேள்வி ஐ. டி. ஐயில் பணிபுரியும் ஆசிரியர்கள் பற்றியது.

திரு. சி. கோவிந்தராஜன்: அந்த ஆசிரியர்களுடைய கோரிக்கைகளில் ஒன்று, அவர்களுடைய ரிடைர்மெண்ட் வயது 55-க்குமேல் நீட்டவேண்டும் என்பது. மற்ற இடங்களில் டீச்சிங் ஸ்டாப்களுக்கு 55-லிருந்து 58 என்று உயர்த்தப்பட்டிருப்பதுபோல், இங்கேயும் இவர்கள் டீச்சிங்ஸ்டாப்களாக இருப்பதால் அதே சலுகையைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது 55 வயதாக இருப்பதையே யார் யாருக்குக் குறைக்கலாம் என்றுதான் அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது, ஆனால் இருப்பதை எடுக்கக்கூடாது என்று ஆசிரியர்களுக்குக் குறைக்கவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருப்பதால், 55 வயதைக் கூட்டுவதாக இல்லை.

@ 524-526-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.